பேரணியினால் மதநல்லிணக்கம் பாதிக்கும் – அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வாதம்!

# பாரத் இந்து முன்னணி பேரணி தேவையற்ற பிரச்சினையை உருவாக்கும்!

## திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை குறித்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் கண்டனம்!

சென்னை, பிப்.13-

“திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை குறித்த வழக்கில் சென்னையில் பாரத் இந்து முன்னணி பேரணி நடத்துவது தேவையில்லாத பிரச்சினையை உருவாக்கும்ம” என சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாரத் இந்து முன்னணி அமைப்பின் வடசென்னை மாவட்ட துணை தலைவர் எஸ். யுவராஜ் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய திருப்பரங் குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று இஸ்லாமியர்கள் எந்த வித அடிப்படையும் இல்லாமல் சொந்தம் கொண்டாடி, பிரச்சனை செய்து வருவதாக குறிப் பிட்டுள்ளார்.

திருப்பரங்குன்றம் மலை முருகப்பெருமானின் மலை அந்த மலையை காக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் சென்னை ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் இருந்து கந்தகோட்டம் முருகன் கோவில் வரை பிப்ரவரி 18 ம் தேதி வேல் யாத்திரை நடத்த அனுமதி கோரியிருந்தாக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக, கையில் வேல் ஏந்தி பேரணி நடத்த காவல்துறை அனுமதி கோரி மனு அளித்தும் இதுவரை காவல்துறை அனுமதியளிக்கவில்லை என்பதால் பிப்ரவரி 18 ஆம் தேதி வேல் யாத்திரை நடத்த அனுமதிக்க வழங்க காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.

**அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வாதம்!**

இந்த வழக்கு நீதிபதி இளந்திரையன் முன்பு விசாரனைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான மாநில தலைமை அரசு குற்றவியியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆஜராகி வாதிட்டது வருமாறு :

திருப்பரங்குன்றம் மலையின் உரிமையாளர் குறித்து பேரணி நடத்த மனுதாரர் அனுமதி கோருகிறார். ஏற்கனவே 05.02.2025 அன்று சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இந்து முன்னணி சார்பில் போராடம் நட்த்த அனுமதி வேண்டி வழக்கு தாக்கல் செய்யப் பட்டு, மத கலவரங்களை தூண்டும் வகையில் ஊர்வலத்தினர் முழக்கங்களை எழுப்பக் கூடாது என்கிற நிபந்தனையுடன் அனுமதியளித்தது. நீதி மன்றம் உத்தரவையும் மீறி பொது அமைதிக்கும் மத நல்லிணத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசியதால் முழக்கங்கள் எழுப்பியவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் கேட்கக்கூடிய வழிப்பாதை மிகவும் நெருக்கடியான போக்குவரத்து நெரிசல் நிறைந்த சாலை. ஏற்கனவே உரிமை குறித்து பிரிவிகவுன்சில் வரை சென்று முடிவு செய்யப் பட்ட பிறகு மீண்டும் அது குறித்த பிரச்சனை எழுப்புவது சரியல்ல. 1931 ஆம் ஆண்டே மதுரை சப் கோர்ட்டில் “நெல்லித்தோப்பு, சிக்கந்தர் தர்கா, கொடிமரம், மலையேறும் வழிப்பாதை இஸ்லாமியர்களுக்கு சொந்தம் என தீர்ப்பிளித்துள்ளது. அந்த தீர்ப்பிற்கு மேல்முறையீடு சென்னை உயர் உயர்நீதி மன்றம் அதன் பின்னர் ப்ரிவி கவுன்சில் வரை சென்று மதுரை சப் கோர்ட்டின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இஸ்லாமியர்கள் அவர்களுடைய இடத்தில் வேண்டுதலுக்காக ஆடு கோழி பலியிட்டு படைத்து உண்ணுவது இது வரை வழக்கமாக உள்ளது என அனைத்து தரப்பினரையும் அழைத்து விசாரித்த ஆர்.டி.ஓ அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சி ஆட்சிதலைவரும் இந்த பழக்கம் நடைமுறையில் உள்ளதை அரசுக்கு தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையை சுற்றியுள்ள மதுரை மாவட்டத்தில் உள்ள கோவில்களில் கூட பிராணிகளைப் பலியிடுவது வழக்கமாக உள்ளது

உதாரணத்திற்கு

1) மேலூர் வட்டம், அழகர் கோவில், 18 ஆம்படி கருப்ப சாமி திருக்கோவில்

2) மதுரை கிழக்கு வட்டம், பாண்டிமுனிஸ்வரர் கோவில்

3) வலையங்குளம் மலையாண்டி கருப்பசாமி திருக்கோவில்

4) கிராமங்களில் உள்ள எல்லைக் காவல் தெய்வங்கள்.

மேலும் கடந்த 18.01.2025 அன்று மதுரை முஸ்லீம் ஐக்கிய ஜமாத் என்ற பெயரில் பிராணிகளைப் பலியிட்டு தர்காவில் சமபந்தி விருந்தி ற்கு அழைப்பு விடுப்பது போன்று சில சமூக விரோதிகள் பொய்யான பதிவினை வெளியிட்டுள்ளார்கள். இது சம்பந்தமாக மதுரை முஸ்லீம் ஐக்கிய ஜமாத் மதுரை காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளனர். சமூகங்களிடையே நிலவும் மத நல்லிணக்கத்தை கெடுக்கும் விதத்தில் சமூக விரோதிகள் திட்டமிட்டு இச்செயல்களை செய்து வருகின்றனர்.

காலங்காலமாக திருப் பரங்குன்றம் மலையை சுற்றியுள்ள மக்கள் இந்து, முஸ்லீம் மற்றும் ஜெயின் ஆகியோர் மத வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். மதத்தால் மற்றும் இனத்தால் என்றென்றும் தமிழ்நாடு மக்கள் ஒரே குடும்பத்தினராக தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர். இந்துக்களும் முஸ்லீம்களும் சகோதர சகோதரிகளாகவே இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.

திருப்பரங்குன்றம் மலையை ஓர் காரணமாக்கி இந்து முஸ்லீம்களிடையே தேவையற்ற கலவரங்களை உருவாக்கி மக்களின் ஒற்றுமை குலைந்து விடக் கூடாது.

**கோவில் நகரம் மதுரை!**

தமிழ்நாட்டில் கோவில் நகரமாக அழைக்கப்படும் மதுரை மத நல்லிணத்திற்கு பெயர் பெற்ற புனித தலமாகும். கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள சுல்தான் அலாவுதீன் தர்காவில் இன்று வரை இந்து மதத்தை சேர்ந்த செங்குன்ற முதலியார் சமூக மக்களால் வழங்கப்படும் கொடிதான் ஏற்றப்படுகிறது.

சமீபத்தில் கூட, மதுரைக்கு அருகிலுள்ள காரைக்குடியில் உள்ள ஒரு இந்து கோவில் கும்பாபிஷேகத்திற்கு முஸ்லீம் மதத்தினர் சீர்வரிசை, நன்கொடை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முஸ்லீம் சமுதாயத்தினர் விநாயக சதுர்த்தி விழாவினை கொண்டாடி ஏறக்குறைய ஆயிரம் இந்து சமுதாயத்திற்கு அன்ன தானம் வழங்கினார்கள். திருப்பூர் ஒத்தப்பாளையம் கிராமத்தில் முஸ்லீம் சமுதாயத்தினர் ஒரு விநாயகர் கோவில் அமைக்க 3 சென்ட் நிலத்தை தானமாக வழங்கியதோடு அக்கோவில் குடமுழுக்கு விழாவில் இரு சமுதாயத்தினரும் ஒன்றாக பங்குக் கொண்டு சிறப்பாக விழா நடத்தினார்கள்.

**நாகூர் தர்கா!**

நாகூர் தர்கா கந்தூரி விழாவில் போர்த்தப்படுகிற போர்வை பழனியாண்டி பிள்ளை பரம்பரையிலிருந்து தான் இன்று வரை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மத நல்லிணத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் என்றும் பெயர்பெற்றது. மத வேறுபாடின்றி மக்கள் ஒரே சமுதாயமாக வாழ்ந்து வருகின்றனர். மத நல்லிணக்கத்தை காப்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது என்றும் ஒவ்வொருவரின் மத நம்பிக்கையை பாதுகாப்போம் என்றும் யாருடைய மத வழிபாட்டிலும் நாங்கள் தலையிடமாட்டோம் என்றும் தடுக்க மாட்டோம் என்றும் உறுதிப்பட தெரிவித்தார். இது போன்ற போராட்டங்களால் மத நல்லிணக்கம் பாதிக்கும் என்றும் சுட்டிக் காட்டி வாதாடினார்.

இத்தருணத்தில் மனுவில் கோரியுள்ளவாறு 18.02.2025 அன்று ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கினால் அது தேவையற்ற விரும்பதகாத பிரச்சனைகளை உருவாக்கும் என தனது கடுமையான எதிப்பினை தெரிவித்தார்.

**நீதிபதி கண்டனம்!**

வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், பேரணி நடத்த கேட்டுள்ள இடம் கூட்ட நெரிசல் மிகுந்தது என்றும் திருப்பரங் குன்றம் அந்த பிரச்சனைக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்றும் தேவையில்லாமல் பிரச்சனையை உருவாக்கப் பார்க்கிறீர்கள் என கண்டனம் தெரிவித்தார். வேறு இடத்தை தேர்வு செய்து தெரிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி உத்தரவினை நாளை மறுதினம் ஒத்தி வைத்துள்ளார்.

# பிரதமர் பொது நிவாரண நிதி மூலம் மருத்துவ நிதி உதவி!

## டாக்டர் கலாநிதி வீராசாமி கோரிக்கை ஏற்பு!

புதுடெல்லி, பிப். 13 -

இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்று நோய் போன்ற கொடிய நோயினால் பாதிக்கப் பட்ட குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பிரதம மந்திரியின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி பெற்று தரும்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி தன்னிடம் வரும் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி அதனை பிரதமர் அவர்களுக்கு கடிதங்கள் மூலம் நோயாளிகளுக்கு நிதியுதவி பெற்றுத் தருகிறார்.

இதில் தொகுதி மக்கள் மட்டுமின்றி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களும் டாக்டர் கலாநிதி வீராசாமியை அணுகி மருத்துவ உதவி கோரியவர்களுக்கு நிதி உதவிகளை பெற்று தருகிறார். இத்திட்டத்தின் மூலம் சென்ற மாதம் 20 நோயாளிகளுக்கு சுமார் ரூபாய் 31.50 லட்சம் அளவிற்கு நிதி உதவி பெற்று தந்து உள்ளார்.

# சூரத்தில் தொழிற்சாலையில் தீ விபத்து!

காந்திநகர், பிப். 13 -

குஜராத் மாநிலம் சூரத் மாவட்டத்தில் பிஸ்கட் மற்றும் வேபர் பாக்கெட்டுகள் உற்பத்தி செய்யும் பிரபல தொழிற்சாலை இயங்கி வந்தது. இந்நிலையில் போர் சாரா கிராமத்தில் உள்ள இந்த தொழிற்சாலையில் தீ ஏற்பட்டதாக தீயணைப் புத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலறிந்த தீயணைப் புத் துறையினர் 7 தீயணைப்பு வாகனத்துடன் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதனிடையே தீயானது கிடுகிடுவென அடுத்தடுத்து பரவத்தொடங்கியது. சுமார் 12 மணி நேர போராட்டத்திற்கு பின்னர் கொழுந்துவிட்டு எரியும் தீயை தீயணைப்புத்துறையினர் அணைத்தனர்.

இதில் தொழிற்சாலையில் பெரும் பகுதி முற்றிலும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த டிரம்களில் எரியக் கூடிய திரவம் இருந்தது அதனால் தான் தீயின் தாக்கம் பெரியதாக இருந்தது என கூறப்படுகிறது.

இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் தீ எவ்வாறு ஏற்பட்டது என விசாரணை நடத்தி வருகின்றனர்.

கல்வியைப் புறந்தள்ளிவிட்டு, காவியைப் புகுத்தும் பாசிச பா.ஜ.க. அரசிற்கு வன்மையான கண்டனங்கள்!

# தி.மு.க. மாணவர் அணி சார்பில் பகுத்தறிவுப் பிரச்சாரம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

**சென்னை, பிப். 13 - கல்வியைப் புறந்தள்ளி விட்டு, காவியைப் புகுத்தும் பாசிச பா.ஜ.க. அரசிற்கு வன்மையான கண்டனங்கள் எனவும், தி.மு.க. மாணவர் அணி சார்பில் பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள்ளப் படும் எனவும் மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள் ளார்.**

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சமத்துவம், சமதர்மம், சமூகநீதி, மதச்சார்பின்மையை உள்ளடக்கிய திராவிட பண்பாட்டிற்கு நேர் எதிரானது ஆரியப் பண்பாடு. இதை பல்வேறு வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் மொழியியல் வல்லு னர்களும் நிறுவி யுள்ளனர். அது போலத் தான் தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு நேர் எதிரானது ஒன்றிய பாஜக அரசு முன்வைக்கும் காசியின் ஒற்றை கலாச்சாரம். இப்படியிருக்க “காசி தமிழ்ச் சங்கமம்” என்ற பெயரில் ‘காசியுடன் தமிழ்நாட்டுக்கு இருக்கும் கலாச்சாரத் தொடர்பை மீண்டும் கொண்டு வருவோம்’ என்ற முழக்கத்துடன் கடந்த 2022 ஆண்டு முதல் ஆண்டு தோறும் பல்வேறு நிகழ்ச்சிகளை பாசிச பா.ஜ.க அரசு நடத்தி வருகிறது.

**மாணவர்களிடம் மதவெறியைப் பரப்பும் பா.ஜ.க.!**

இந்நிலையில் இந்த ஆண்டின் கரு பொருளாக ‘அகத்திய முனி’ என்று வைக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி நேற்று சென்னையில் அகத்திய முனிவர் நடைப்பயணம் என்ற பெயரில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 4 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அகத்தியர் வேடமிட்டு நடைபயணம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதிற்கும் மத வெறி அரசியலை முன்னிறுத்தி மக்களை பிளவு படுத்தி, மக்களின் ஒற்றுமையை சிதைத்து வரும் பா.ஜ.க. தற்போது எதிர்கால தலைமுறையான பள்ளி, கல்லூரி மாணவர்களிடமும் மதவெறி நஞ்சினை விதைக்கத் தொடங்கி இருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இந்திய (இந்து) கலாச்சாரத்தை பாதுகாக்கிறோம்; தேசிய உணர்வை வளர்கிறோம் என்ற பெயரில் தங்களின் இந்துத்துவ அரசியல் செயல்திட்டத்தை மாணவர்களிடம் பரப்பி அவர்களின் அறிவியல், பகுத்தறிவு சிந்தனையை மழுங்கடிக்கும் வேலையை ஆட்சியில் அமர்ந்த நாள் முதல் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வருகிறது.

மும்மொழிக் கொள்கை மூலம் இந்தியை திணிக்க முனைவது, சி.பி.எஸ்.சி.இ. பாடத்திட்டத்தில் மனுதர்ம சாஸ்திரத்தை விவரிக் கும் கருத்துப்படங்களும், அறிவியலுக்கு மாறான புராண இதிகாச கருத்துகளை உள்ளடக்கிய பாடங்களை திணிப்பது, உயர் கல்விக்கான நிதியை குறைப்பது தடுப்பது, மூன்று, ஐந்து, எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு கொண்டு வந்து மாணவர்கள் பள்ளி படிப்பை நிறைவு செய்ய முடியாத வகையில் இடைநிற்றலை உருவாக்கி அனைவருக்கும் கல்வி வழங்கும் வாய்ப்பை சிதைப்பது என அனைத்திற்கும் ஊற்றாக விளங்கும் சமூகநீதி, சமத்துவம், சம வாய்ப்புக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கை 2020யை நடைமுறைபடுத்த மாநிலங்களை அப்பட்டமாக அச்சுறுத்தும் நடவடிக்கையாக தமிழ்நாட்டி ற்குத் தர வேண்டிய பள்ளிக் கல்வித் திட்டத்திற்கான நிதி ரூ.2,152 கோடியை பறித்து, வேறு மாநிலங்களுக்கு அளித்திருப்பது இதுவரை இந்திய வரலாற்றில் எந்த ஒன்றிய அரசும் மாநிலங்களை அரசியல் ரீதியாக பழிவாங்குவதற்காக கல்விக்கு தடை ஏற்படுத்தும் அளவிற்கு இரக்கமில்லா மல் நடந்துக் கொள்ளவில்லை என கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் தனது கண்டனத்தை எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார். பல்வேறு மாணவர் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் ஒன்றிய பாஜக அரசு தற்போது ‘காசி தமிழ்ச் சங்கமம்’ என்ற பெயரில் ஆன்மீகத்தின் பெயரால் மாணவர்களிடையே சாதிய, மதவாத உணர்வுகளை விதைக்கும் வஞ்சக செயலில் ஈடுபடத் தொடங்கி இருக்கிறது.

உலக நாடுகள் அனைத்தும் AI (Artificial Intelligence) எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியில் போட்டிப் போட்டுக் கொண்டு முன்னேறி வரும் நிலையில், இங்குள்ள ஒன்றிய பாஜக அரசு கல்வியில் மதத்தைத் திணிக்கும் பிற்போக்குத் தனத்திற்கு கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து வருகிறது. இதை தந்தை பெரியார் அவர்கள் 1931 ஆம் ஆண்டே பின்வருமாறு விவரிக்கிறார், “மதத்திற்கும், உலக இயற்கைக்கும் எப்போதுமே சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில் அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழி மறித்து கண்மூடித்தனமான செயற்கையில் திருப்புவதையே ஜீவநாடியாய் கொண்டிருக்கின்றது. அதனால் மதம் கலந்த படிப்பால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய் விடுகின்றது.”

**கல்வியை காவிமயமாக்கும் பா.ஜ.க.!**

பகுத்தறிவுக் கொள்கைகளை மாணவர்கள் மத்தியில் விதைத்து பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் சமத்துவ சமுதாயத்தை நிறுவிட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வரும் திராவிட மாடல் நாயகன், கழகத் தலைவர்மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டில், கல்வியை காவி மயமாக்கும் பாஜகவின் இத்தகைய சதி திட்டத்திற்கு திமுக மாணவர் அணி கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், அறிவியலுக்கு எதிரான பா.ஜ.க.வின் மதவாதப் பிரச்சா ரத்தை முறியடிக்கும் வகையில் கழகத் தலைவர் முதலமைச்சர் மற்றும் இளந்தலைவர்துணை முதலமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு, தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாணவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்று தி.மு.க. மாணவர் அணி தெரிவித்துக்கொள்கிறது.

**படி! நன்றாகப்படி!**

மறந்துவிட்டவைகளை மீண்டும் படிக்கவும், புதிதாக வளரும் இளைய தலைமுறை பழைய வரலாறுகளை அறிந்து கொண்டு நமது பகை எது என்பதைப் புரிந்து கொள்ளவும்.

**- முத்தமிழறிஞர் கலைஞர்**

இவ்வாறு சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர துறை வடக்கு**

வ.வ.அ.இ.பொ.து.ந.க.எண்.B3 / 052 / 2025

**குறுகியகால மின்னணு ஒப்பம்**

**கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)**

| கோப்பு எண். | பணியின் விவரம் | முன்வைப்பு தொகை |
|---|---|---|
| பி3/052/2025 | பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5 லாரி நிலையத்தில் உள்ள 39 எண்ணிக்கையிலான HMV & LMV வாகனங்களுக்கான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கான (PMRR) ஒப்பந்த அடிப்படையில் 365 நாட்களுக்கு பணியமர்த்துதல், | ரூ.47,000/- |

ஒப்படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 24.02.2025 மாலை 03.00 மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 25.02.2025 மாலை 03.15 மணி

மேலும் விபரங்களுக்கு: http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 571 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)


## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# மாநில நிர்வாகிகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில துணைச் செயலாளர்கள் பொன்.கௌதமசிகாமணி, ஜே.எல். ஈஸ்வரப்பன், நெல்லை வே.நம்பி ஆகியோர் இரண்டு பொறுப்புகள் வகித்து வருவதால், அவர்களை விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர்களுடன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில நிர்வாகிகள் பின்வருமாறு மாற்றி அமைத்து அறிவிக்கப்படுகிறது.**

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி**
**மாநில நிர்வாகிகள்**

**செயலாளர் – தயாநிதி மாறன், எம்.பி.,**

**துணைச் செயலாளர்கள் –**
**எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம்.**
**ஆர்.கோபால்ராம், சென்னை.**
**எஸ்.கார்த்திக், கரூர்.**
**மு.வாசிம்ராஜா, குன்னூர், நீலகிரி.**
**சுரேஷ் ஜே.மனோகரன், மதுரை.**
**செல்வி நிவேதா ஜேசிகா, சென்னை.**
**வே.கௌதமன், சென்னை.**
**தனுஷ் எம்.குமார், விருதுநகர்.**
**திருவரங்கம் நா.ஆனந்த், திருச்சி.**
**வழக்கறிஞர் பி.கே.பாபு, சென்னை.**
**முகமது இஷ்ரத், சென்னை.**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 12.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | 222 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/568/ஒப்பந்தப்புள்ளி/2025




கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி இராயபுரம் தொகுதி 53வது வார்டு போஜராஜன் நகர் சுரங்கப்பாதையை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். சுரங்கப் பணியை விரைவில் முடிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இவர்களுடன் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் கொரியர் முருகன், மண்டலம் 5 அதிகாரி திருமதி. ஃபரிதா பானு, சென்னை மாநகராட்சி ஏ பிரபுதாஸ், ஏஇ. பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# என். ஜெயக்குமார்

## பிப்ரவரி 13 (2024)



**கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலமாக செயல்பட்டு வந்த இராயபுரம், “அறிவகத்தில்” 1970ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேரக்குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழகத்தில் பணியாற்றியவர்.**

**கழகத் தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ண ஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்தவர்.**

**கிளை முதல் மாவட்ட அமைப்பு வரையிலான அனைத்து அமைப்புகளின் பெயர், அதன் நிர்வாகிகள் பெயர் என அனைத்து விவரங்களையும் கணினி போல தன் மனதில் பதிந்து வைத்து, அதனை தலைவர் கேட்கும்போது உடனடியாக சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றதுடன், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து கழக நிர்வாகிகள், முன்னோடிகளின் வரலாற்றை அறிந்து வைத்திருந்தவர்.**

**கழகத் தலைவர் அவர்கள் “தலைமைக் கழகத்தை நாடி வந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் அன்போடும் உரிமையோடும் உறவாடி ‘அறிவாலயம் ஜெயக்குமார்’ எனப் பெயரிட்டனர். உடன்பிறப்பு என்ற சொல்லுக்கேற்ப உடன்பிறப்பாய் துணை நின்ற அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களை வழியனுப்பும் துயர நிலைக்கு இன்று ஆளாகிவிட்ட கொடுமையும் வந்து சேர்ந்துவிட்டது. கலங்கி நிற்கும் உங்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன்.” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**